RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 125 | மே.12 2026 செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் உட்பட புதிய எம்எல்ஏக்கள் பதவியேற்பு

சென்னை: மே.12-

17வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் நேற்று தொடங்கியது. இதில், தற்காலிக பேரவைத் தலைவர் கருப்பையா முன்னிலையில், முதல்வர் ஜோசப் விஜய் உட்பட பேரவையின் புதிய உறுப்பினர்கள் எம்எல்ஏவாக பதவியேற்றனர்.

தமிழக முதல்வராக தவெக தலைவர் ஜோசப் விஜய் நேற்று பதவியேற்றார். இதனையடுத்து தற்காலிக பேரவைத் தலைவராக சோழவந்தான் தொகுதி தவெக உறுப்பினர் எம்.வி.கருப்பையாவை நியமிப்பதற்கான கோப்பில், முதல்வர் ஜோசப் விஜய்யிடம், பேரவைச் செயலர் கி.சீனிவாசன் ஒப்புதல் பெற்றார்.

ஆளுநர் மாளிகையில், தற்காலிக பேரவைத் தலைவராக கருப்பையாவுக்கு ஆளுநர் அர்லேகர் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்நிகழ்வில், முதல்வர் ஜோசப் விஜய் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.



இந்த நிலையில், 17வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் நேற்று காலை தொடங்கியது. இதில் பங்கேற்பதாக தவெக, திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகளின் சார்பாக வெற்றிபெற்ற உறுப்பினர்கள் அனைவரும் சட்டப்பேரவைக்கு வருகை தந்தனர்.

எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக எம்எல்ஏக்கள் ஒரு குழுவாகவும், எஸ்.பி.வேலுமணி தலைமையில் ஒரு குழுவாகவும் தனித்தனியாக வந்தனர். இருவரும் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை.

முதல்வர் விஜய் பதவியேற்பின்போது வந்தது போலவே நேற்றும் கோட் சூட்டில் வருகை தந்தார். சரியாக 9.30 மணிக்கு சட்டப்பேரவையின் முதல் கூட்டம் சபாநாயகர் தலைமையில் தொடங்கியது.

சபாநாயகர் உரைக்குப் பிறகு முதல்வர் விஜய் உட்பட உறுப்பினர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வந்து உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

## டி.கே.பிரபு... காரைக்குடி தொகுதியில் இருந்து முதல் முறையாக அமைச்சர்!

காரைக்குடி: மே.12-

காரைக்குடி தொகுதியிலிருந்து முதல் முறையாக அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளதால், அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை ஆகிய 4 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இதில் சிவகங்கை தொகுதியில் எம்எல்ஏக்களாக இருந்த தா.கிருஷ்ணன், ஜி.பாஸ்கரன் அமைச்சர்களாக இருந்துள்ளனர்.

அதேபோல், திருப்பத்தூர் தொகுதியில் எம்எல்ஏக்களாக இருந்த மாதவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் அமைச்சர்களாக இருந்துள்ளனர்.




காரைக்குடி சட்டப்பேரவைத் தொகுதியில் 1952ம் ஆண்டிலிருந்து 2021 வரை 16 எம்எல்ஏக்கள் இருந்துள்ளனர். ஆனால், இதுவரை ஒருவர்கூட இத்தொகுதியிலிருந்து அமைச்சராக நியமிக்கப்படவில்லை.

இந்த முறை தவெக எம்எல்ஏவாக தேர்வாகியுள்ள டி.கே. பிரபு (42), அமைச்சராக இடம்பெற்றுள்ளார். முதல் முறையாக அமைச்சர் கிடைத்துள்ளதால், இத்தொகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

டி.கே.பிரபு தேவகோட்டை அருகே இருமதியைச் சேர்ந்தவர். காரைக்குடியில் பல் மருத்துவராக உள்ளார். இவரது தந்தை துரை. கருணாநிதி முன்னாள் ராணுவ வீரர். தாயார் சரஸ்வதி, தேவகோட்டை முன்னாள் ஒன்றியத் தலைவர். மனைவி, ஒரு மகள், ஒரு மகன் உள்ளனர். தவெக கிழக்கு மாவட்டச் செயலாளராகவும் உள்ளார்.

## அதிமுகவில் கையெழுத்து வேட்டை: பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு வலுக்கும் எதிர்ப்பு

சென்னை: மே.12-

அதிமுகவில் பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு எதிர்ப்பு வலுத்துள்ளது. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தலைமையில் அதிமுக எம்எல்ஏக்கள் 34 பேர் தவெகவுக்கு ஆதரவு அளிக்க முடிவெடுத்துள்ளனர். அவர்களது ஆதரவுக் கடிதத்துடன் முதல்வர் ஜோசப் விஜய்யை சந்திக்க சி.வி.சண்முகம் முயற்சி மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

தேர்தலில் அதிமுக 47 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. ஆனால், எதிர்க்கட்சி அந்தஸ்து கூட கிடைக்காத அளவுக்கு தோல்வியை சந்தித்துள்ளது. பல தொகுதிகளில் 3ம் இடத்துக்கு சென்றதுடன், பலர் டெபாசிட்டையும் இழந்துள்ளனர்.

இதனால், வெற்றி பெற்ற எம்எல்ஏக்கள் பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர். தோல்விக்குப் பொறுப்பேற்று பொதுச் செயலாளர் பதவியில் இருந்து அவர் விலக வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.



அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக முன்னாள் அமைச்சர்கள் சி.வி.சண்முகம் தலைமையில் எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கர் மற்றும் இதர எம்எல்ஏக்கள் கடந்த 3 நாட்களாக சென்னை எம்ஆர்சிநகரில் உள்ள சி.வி.சண்முகம் இல்லத்தில் தீவிர ஆலோசனை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், அதிமுக எம்எல்ஏக்கள் 34 பேர் சி.வி.சண்முகம் தலைமையில் தவெகவுக்கு ஆதரவளிக்க முடிவெடுத்துள்ளனர்.

முன்னதாக, நேற்று காலை பழனிசாமி தலைமையில், சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள அவரது இல்லத்தில், சி.வி.சண்முகத்தின் நடவடிக்கை தொடர்பாக மாவட்டச் செயலாளர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. அதில், சி.வி.சண்முகத்துடன் சமாதானப் பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து, பழனிசாமி தரப்பில், சி.வி.சண்முகத்தை சந்தித்து பேசியதில், ''பழனிசாமி சரியான கூட்டணி அமைக்கவில்லை. வேட்பாளர்களுக்கு கட்சி நிதியும் போதிய அளவு வழங்கவில்லை. கட்சியின் தோல்விக்கு அவர்தான் காரணம். அதனால், அவர் பதவி விலக வேண்டும். தவெகவுக்கு அதிமுக எம்எல்ஏக்கள் ஆதரவு அளிப்பது உறுதி. அதில் எந்த மாற்றமும் இல்லை'' என்று சி.வி.சண்முகம் திட்டவட்டமாக கூறியதாக தெரிகிறது.

அதிமுக எம்எல்ஏக்கள் 34 பேரின் ஆதரவுக் கடிதமும் தயாரிக்கப்பட்டுள்ளது. மூன்றில் 2 பங்கு, அதாவது 32 எம்எல்ஏக்களுக்கு மேல் தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தால் கட்சித் தாவல் சட்டம் பாயாது என சட்ட ஆலோசனையும் பெறப்பட்டுள்ளது.

34 பேரின் ஆதரவுக் கடிதத்துடன், முதல்வர் ஜோசப் விஜய்யை சந்திக்க சி.வி.சண்முகம் முயற்சி மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. அதிமுக சட்டப்பேரவைக் குழுத்தலைவராக எஸ்.பி.வேலுமணியை தேர்வு செய்வதற்கான முயற்சியும் தீவிரமாக நடந்து வருகிறது.



## அதிமுக சட்டமன்ற குழு தலைவர் பதவி: பழனிசாமிக்கு 17 எம்.எல்.ஏக்கள் மட்டுமே ஆதரவு

சென்னை: மே.12-

அதிமுக சட்டமன்றக் குழுத் தலைவராக எடப்பாடி பழனிசாமி செயல்படுவார் என அக்கட்சியைச் சேர்ந்த 17 சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவைச் செயலரிடம் மனு அளித்துள்ளனர். இதனால், அதிமுக சட்டமன்றக் குழு தலைவர் பதவியைத் தக்கவைப்பதில் பழனிசாமிக்குச் சிக்கல் எழுந்துள்ளது.

17வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் இன்று காலை தொடங்கியது. அதிமுகவில் மொத்தம் 47 எம்எல்ஏக்கள் உள்ள நிலையில், சட்டமன்ற கட்சித் தலைவர் பதவிக்கு எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக இதுவரை 17 எம்எல்ஏக்கள் மட்டுமே சட்டமன்றச் செயலரிடம் மனு அளித்துள்ளனர். அதில், அதிமுக சட்டமன்றக் குழுத் தலைவராக எடப்பாடி பழனிசாமி செயல்படுவார் என கூறப்பட்டுள்ளது.

மீதமுள்ள 30 எம்எல்ஏக்களின் நிலைப்பாடு என்ன என்பது கேள்விக்குறியாகியுள்ளது. எஸ்.பி.வேலுமணி, சி,.வி. சண்முகம் தலைமையிலான குழுவில் அதிகப்படியான எம்எல்ஏக்கள் இருப்பதாகக் கூறப்படுவதால், அதிமுகவில் எடப்பாடி பழனிசாமியின் தலைமைக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக சொல்லப்படுகிறது.

இன்று காலை சட்டமன்றத்துக்கு, எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக எம்எல்ஏக்கள் ஒரு குழுவாகவும், எஸ்.பி.வேலுமணி தலைமையில் ஒரு குழுவாகவும் தனித்தனியாக வந்தனர். இருவரும் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

எடப்பாடி பழனிசாமிக்கு 17 பேர் மட்டுமே ஆதரவு தெரிவித்துள்ள தகவல் உறுதியாகும் பட்சத்தில், அவர் அதிமுக சட்டமன்ற குழு தலைவர் பதவியைத் தக்கவைத்துக் கொள்வதில் சிக்கல் ஏற்படலாம். வரும் நாட்களில் அதிமுகவில் இந்த அதிகாரப் போட்டி மேலும் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## சபாநாயகர் தேர்தல்: தவெக சார்பில் ஜே.சி.டி.பிரபாகர் வேட்புமனு தாக்கல்

சென்னை: மே.12-

சபாநாயகர் தேர்தலில் போட்டியிடுதற்காக ஆளும் கட்சியான தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் ஜே.சி.டி.பிரபாகர் இன்று வேட்புமனுத் தாக்கல் செய்தார். சென்னைத் தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்றச் செயலாளர் அலுவலகத்தில் அவர் தனது மனுவை சமர்ப்பித்தார்.

கடந்த ஜனவரி மாதம், விஜய் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த அவர், நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் ஆயிரம் விளக்கு தொகுதியில் திமுக வேட்பாளர் எழிலன் நாகநாதனை 15,141 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். கடந்த 2011ஆம் ஆண்டு சென்னை வில்லிவாக்கம் தொகுதியில் திமுக வேட்பாளரான அன்பழகனை வீழ்த்தி வெற்றிபெற்றார். சட்டமன்ற நடைமுறைகளில் அவருக்குள்ள அனுபவத்தை கருத்தில் கொண்டே, அவரை சபாநாயகர் வேட்பாளராக விஜய் தேர்வு செய்துள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழக முதல்வராக தவெக தலைவர் விஜய் பதவியேற்றுள்ள நிலையில், அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ஜே.சி.டி.பிரபாகர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. இருப்பினும், எதிர்க்கட்சிகள் சார்பில் யாராவது வேட்புமனுத் தாக்கல் செய்வார்களா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஒருவேளை அவ்வாறு தாக்கல் செய்யும் பட்சத்தில் நாளை இதற்கான தேர்தல் குரல் வாக்கெடுப்பு மூலம் பேரவையில் நடைபெறும்.

## புதுச்சேரி முதல்வராக மே 13ல் மீண்டும் பதவியேற்கிறார் ரங்கசாமி

புதுச்சேரி: மே.12-

புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியோடு இரு பாஜக எம்எல்ஏக்கள் இருவர் மே 13ல் பதவியேற்கிறார்கள்.

புதுச்சேரியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைய உள்ளது. முதல்வர் ரங்கசாமி தலைமையில் அமையும் ஆட்சியில் கடந்த முறையை போலவே பாஜகவுக்கு 2 அமைச்சர் பதவி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் ஒரு அமைச்சர் பதவி மட்டுமே வழங்கப்படும் என ரங்கசாமி தெரிவித்திருந்தார்.



நேரடியாக மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியாவுடன் நடந்த பேச்சுவார்த்தையில், பாஜகவுக்கு 2 அமைச்சர் பதவி வழங்க முதல்வர் ரங்கசாமி சம்மதித்துள்ளார்.

நாளை மறுநாள் 13ம் தேதி புதன்கிழமை காலை ரங்கசாமி முதல்வராக பதவி ஏற்க உள்ளார். முதல்வரோடு பாஜகவை சேர்ந்த 2 எம்எல்ஏக்கள் பதவி ஏற்க உள்ளனர். பாஜக சட்டமன்ற கட்சித்தலைவர் நமச்சிவாயம், காரைக்கால் திருநள்ளாறு தொகுதியில் வெற்றி பெற்ற பாஜக எம்எல்ஏ ராஜசேகரன் ஆகியோர் அமைச்சர்களாக பதவி ஏற்கவுள்ளதாக பாஜக வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதற்கான விழா, ஆளுநர் மாளிகை வளாகத்தில் நடைபெற உள்ளது. ஆளுநர் கைலாஷ்நாதன், முதல்வர், அமைச்சர்களுக்கு பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைக்கிறார். என்.ஆர்.காங்கிரஸ் தரப்பில் அமைச்சர்கள் எப்போது பதவியேற்பார்கள் என்று விசாரித்தபோது, "முதல்வர் முதலில் பதவி ஏற்பார். என்ஆர்.காங்கிரசை சேர்ந்த எம்எல்ஏக்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட உள்ளது. அவர்கள், வேறொரு நாளில் பதவியேற்பார்கள். என்.ஆர். காங்கிரசில் மல்லாடிகிருஷ்ணாராவ், ராஜவேலு ஆகியோருக்கு அமைச்சர் பதவி உறுதியாகியுள்ளது. மற்றொரு அமைச்சர் பதவிக்காக சிவகொழுந்து, நாராயணசாமி ஆகியோர் முயற்சிக்கின்றனர்" என்றனர்.



# பாடியநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி 12ம் வகுப்பு பொதுதேர்வில் 97 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே 12-
மாதவரம் தொகுதி பொன்னேரி கல்வி மாவட்டம் பாடியநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 278 மாணவ மாணவிகள் தேர்வு எழுதினர். அதில் 97 சதவீதம் பெற்று 269 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். முதல் இடம் ஏ.அபிஷேக் தாஸ் 549 மதிப்பெண்களும் இரண்டாம் இடம் எஸ்.கனகதர்ஷினி 546மதிப்பெண்களும் மூன்றாம் இடம் கே.வர்ஷா 540 மதிப்பெண்களும் பெற்று உள்ளனர். பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ மாணவிகளையும் பாராட்டி தலைமை ஆசிரியர் லலிதா, உதவி தலைமை ஆசிரியர் ரஜினிகாந்த், பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மைக் குழுவினர் உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள் பாராட்டி வாழ்த்தினர்.

# 5.200 கிராம் கஞ்சா பறிமுதல் : ஒருவர் கைது

மாதவரம், மே. 12-
செங்குன்றம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் ஆய்வாளர் ஜமீஸ்பாபு தலைமையில் தனிப்படை போலீசார் செங்குன்றம் மதுவிலக்கு அமல் பிரிவு எல்லைக்குட்பட்ட மீஞ்சூர், செங்குன்றம், மணலி, அத்திப்பட்டு, எண்ணூர் ஆகிய பகுதிகளில் கஞ்சா என்னும் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதை தடுப்பதற்காக மொண்டியம்மன் நகர் சோதனை சாவடி அருகே



சோதனையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகப்படும் படியாகஒரிசா மாநிலத்தில் இருந்து கஞ்சா கடத்தி வந்த சுதம் பாத்ரா (46) என்ற வாலிபரை சோதனை செய்த போது குற்றவாளியிடம் 5.200 கிராம் கஞ்சா இருந்ததை கைப்பற்றி குற்றவாளியை கைது செய்து குற்றவாளி மீது செங்குன்றம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து மேற்படி குற்றவாளியை பொன்னேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.



■ செங்குன்றத்தில் கடந்த 37 ஆண்டுகளாக தரத்திலும், நம்பிக்கையிலும், முதலிடம் பெற்று பொதுமக்களின் நம்பிக்கையையும் பாராட்டையும் பெற்று வரும் நியூ மணி டெக்ஸ்டைல்ஸ் தற்போது மூன்றாவது புதிய கிளையாக திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை சிக்னல் அருகில் மிகப்பிரமாண்டமாக திறக்கப்பட்டது. கடையின் உரிமையாளர் டேவிட் ராஜ், சோனியா வருகை தந்த அனைவரையும் வரவேற்றனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக முன்னாள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி ஜே எஸ். கோவிந்தராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மலர்ச்சி தொண்டு நிறுவனம் பரமன் பச்சைமுத்து, கலந்து கொண்டார். ஆயிரம் ரூபாய்க்கு மேல் பொருட்கள் வாங்குவோருக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும் என்று கடை மேலாளர் பேட்ராஜ், தனன்ஜெயன் கூறினார்.



# குன்னூரில் மாவட்ட அளவிலான ஆக்கிப்போட்டி அறிஞர் அண்ணா மேல்நிலை பள்ளி மைதானத்தில் நடைபெற்றது

குன்னூர் மே.12-
நீலகிரி மாவட்ட அளவிலான ஆக்கிப்போட்டி. குன்னூர் தயான் சந்தனி வெற்றி. ஹாக்கி யூனிட் ஆப் நீல்கிரீஸ் குன்னூர் ஃபிரண்ட்ஸ் மெல்வின் ஜோசப் முகுந்தன் வினித் விக்னேஷ் மனோஜ் மற்றும் பலர் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான ஆக்கிப்போட்டி குன்னூர் அறிஞர் அண்ணா மேல்நிலை பள்ளி மைதானத்தில் நடைபெற்றது இந்த போட்டியில் குன்னூர் தயயான் சந்தனி வெற்றி பெற்று வாகை சூடியது இரண்டாவது இடத்தை அரவங்காடு அணி பெற்றது. குன்னூரில் நடந்த சி டிவிஷன் ஆக்கி போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு உபதலை சாய் ட்ரஸ்ட் நிர்வாகிகள் வரும் பாபி குமார் மற்றும் நிர்வாகிகள் வெற்றி பெற்ற அணிக்கு கோப்பையை வழங்கினர் இரண்டாம் இடம் பிடித்த அரவங்காடு அணிக்கு முன்னாள் ராணுவ வீரரும் இந்நாள் இந்தியன் பேங்க் ஊழியரும் குன்னூர் ஹைவே பெட்ரோல் பாலகிருஷ்ணன் அம்பிகாபுரத்தை சார்ந்த இருவரும் வழங்கினார். முன்னதாக நடந்த பரிசளிப்பு ஹாக்கி யூனிட் ஆப் நீல்கிரீஸ் அமைப்பின் துணைத் தலைவர் சுரேஷ்குமார் வரவேற்றார் பொருளாளர் ராஜா நன்றியுரை ஆற்றினார் சாய் டிரஸ்ட் நிர்வாகிகள் கூறுகையில் நீலகிரியில் செயற்கை புல்வெளி மைதானம் இல்லை அந்த மைதானத்தை வெகுவிரைவில் சாய் டிரஸ்ட் மூலம் அமைத்து தருவோம் என்று உறுதி அளித்தனர் இறுதிப் போட்டியில் நடுவர்களாக வினோத் அருண் செய்திருந்தனர் டி ஓ மற்றும் டிடி கிரி ரவி பிரசாந்த் மணி மற்றும் பல நடுவர்கள் செய்திருந்தனர் வெற்றி பெற்ற வீரர்களுக்கு ஹாக்கி யூனிட் ஆஃப் நீல்கிரீஸ் அமைப்பின் தலைவர் ஆனந்த கிருஷ்ணன் செயலாளர் பாலமுருகன் வாழ்த்துக்களை தெரிவித்தனர் சாய்டிரஸ்டின் மூலம் வருகிற ஞாயிற்றுக்கிழமை மாரத்தான் போட்டி நடைபெற இருப்பதாக தெரிவித்தனர்

# ஜெயந்திநகர் அருள்மிகு மகாசக்தி மாரியம்மன் திருக்கோயில் 160 ஆம் ஆண்டு திருக்கரம் திருவிழா

குன்னூர் மே.12-
குன்னூர் வெலிங்டன் கண்டோண்மென்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர் அருள்மிகு மகாசக்தி மாரியம்மன் திருக்கரம் திருவிழா 06 052026.அன்று முதல், 1105 2026 வரை வெகு விமர்சையாக நடைபெற்றது.அம்மனுக்கு காலை கணபதி ஹோமம், கொடியேற்றத்துடன் துவங்கி, அனைத்து குலதெய்வங்களுக்கும் சிறப்பு பூஜைகள், அம்மன் திருக்கரகம், அலங்காரம் திருவீதி உலா, அதனை தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப் பட்டது.மேல்மருத்துவத்தூர் ஆதி பராசக்தி பூஜை, அதனை தொடர்ந்து இன்னிசை கச்சேரி, முக்கிய நாளான ஞாயிற்றுக்கிழமை அன்று, அம்மனுக்கு மதியம் பூஜைகள் நடைபெற்றது. பக்தர்களுக்கு பூஜையில் கலந்து கொண்டு அம்மனின் தரிசனம் பெற்றனர். தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானும் வழங்ப்பபட்டது.மாலை அருள்மிகு ஜெயந்திநகர் மகாசக்தி மாரியம்மன் திருக்கரம் திருவீதி உலா வந்து கங்கை சென்றடைந்தது. திங்கட்கிழமை நேற்று காலை மஞ்சள் நீராடல், மாலை உற்சவ மூர்த்தி அம்மனுக்கு புஷ்ப ஊஞ்சல் நடைபெற்று ஜெயந்திநகர் மகாசக்தி மாரியம்மன் திருக்கரம் திருவிழா இனிதே நிறைவடந்தது. திருக்கர திருவிழா விற்கான ஏற்பாடுகளை, திருக்கோயில் அறங்காவலர்கள், ஜெயந்திநகர் கிராம நலசங்கத்தினர்,விழா குழுவினர்கள், அனைத்து மகளிர் குழுவினர், ஜயப்ப பக்தர்கள் குழு, மற்றும் ஊர் பொது மக்கள் மிக சிறப்பாக செய்திருந்தனர். திருக்கரக திருவிழாவிற்கு, வெலிங்டன் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையில்,வெலிங்டன் காவல் துறையினர் பாதுகாப்பு ஏற்பாடுகளை மிக சிறப்பாக மேற்கொண்டு இருந்தனர்.



# கட்சி விரோதமாக செயல்பட்டதாக திரிணமூல் காங்கிரஸில் 3 செய்தித் தொடர்பாளர் நீக்கம்

கொல்கத்தா::மே.12-
மேற்கு வங்கத் தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் பெரும் பின்னடைவைச் சந்தித்தது. இதையடுத்து, கட்சியின் மூத்த செய்தித் தொடர்பாளர்கள் சிலர் கட்சியின் செயல்பாடுகள் குறித்தும் விமர்சனங்களை முன்வைத்தனர்.இது தொடர்பாக கோகினூர் மஜூம்தார், ரிஜூ தத்தா மற்றும் கார்த்திக் கோஸ் ஆகியோருக்கு கட்சித் தலைமை விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியிருந்தது. அவர்கள் அளித்த விளக்கம் திருப்தி அளிக்காததாலும், தொடர்ச்சியாகக் கட்சி விதிகளுக்கு மாறாகச் செயல்பட்டதா



லும் அவர்கள் மூவரும் கட்சியிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். கட்சித் தலைமையின் அணுகுமுறை மற்றும் தேர்தல் வியூகங்கள் தோல்வியடைந்ததாக இந்த 3 பேரும் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினர். அதனால் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து கட்சியின் மூத்த தலைவர்கள் கூறுகையில், "கட்சியின் உள்விவகாரங்கள் குறித்துப் பொது வெளியில் பேசுவது ஒழுங்கு நடவடிக்கை மீறலாகும். கட்சியின் கட்டுப்பாட்டைச் சீர்குலைக்க முயல்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தனர்.தேர்தல் தோல்விக்குப் பிறகு திரிணமூல் காங்கிரஸில் உட்கட்சி மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், செய்தித் தொடர்பாளர்கள் மீதான இந்த நடவடிக்கை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



■ நீலகிரி மாவட்டம் உதகை சட்டமன்ற தொகுதியின்சட்டமன்ற உறுப்பினராக போஜராஜன் பதவியேற்றார்

# புதிய வரலாறு படைத்திருக்கிறார் முதல்வர்: மு.க.அழகிரி மகள் கயல்விழி கருத்து

சென்னை:மே.12-
தமிழக முதல்வராக ஜோசப் விஜய் பதவி ஏற்றுக்கொண்ட விழாவில் முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரியின் மகள் கயல்விழி பங்கேற்றார்.



அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஒரு புதிய வரலாற்றை முதல்வர் ஜோசப் விஜய் படைத்திருக்கிறார். மகிழ்ச்சியாக இருக்கிறது. மேன்மேலும் அவர் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என மிக ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.ஓர் இளைஞர் ஆட்சிக்கு வந்திருக்கிறார். அவர் மக்களுக்கு நல்லது செய்வார் என 100 சதவீதம் நம்பிக்கை இருக்கிறது. அவர் மிகவும் கஷ்டப்பட்டு போராடி வெற்றி பெற்றிருக்கிறார்.அவரது போராட்டத்துக்கு நிச்சயம் நல்லது நடக்கும். இதற்காக, தமிழக மக்களுக்கும், அவரது தோழமை கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# மாணவர் தற்கொலை அதிகரிப்பு: 2024ல் 14,488 பேர் உயிரிழப்பு

புதுடெல்லி::மே 12-
இந்தியாவில் மாணவர்களின் தற்கொலை எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருகிறது. கடந்த 2024ம் ஆண்டில் மட்டும் 14,488பேர் உயிரிழந்துள்ளனர். இது முந்தைய ஆண்டை விட 4.3 சதவீதம் அதிகம் என்று தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.நாட்டின் ஒட்டுமொத்த தற்கொலைகளின் எண்ணிக்கை சற்றே குறைந்திருந்தாலும், மாணவர்கள் உயிரிழப்பது அதிகரித்திருப்பது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.இதுகுறித்து புள்ளிவிவரங்களில் தெரிவிக்



கப்பட்டுள்ளதாவது: 2023ல் 1,71,418ஆக இருந்த நாட்டின் மொத்த தற்கொலைகளின் எண்ணிக்கை, 2024ல் 1,70,746ஆக (0.4%) குறைந்துள்ளது. ஆனால், 2023ல் 13,892 ஆக இருந்த மாணவர் தற்கொலை 2024ல் 14,488ஆக அதிகரித்துள்ளது.
கடந்த 10 ஆண்டுகளில் (20152024) மாணவர் தற்கொலை விகிதம் 62.2 சதவீதம் அதிகரித்துள்ளது. 2015ல் 8,934ஆக இருந்த இந்த எண்ணிக்கை தற்போது 14,488ஐ எட்டியுள்ளது. மாணவர்கள் தற்கொலையில் மகாராஷ்டிரம் (13.2%) முதலிடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (10.9%), மத்தியப் பிரதேசம் (10%) மற்றும் தமிழ்நாடு (8.9%) ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.கல்வித் தகுதியின் அடிப்படையில் பார்த்தால், 10ம் வகுப்பு வரை படித்த மாணவர்களே அதிகளவில் (25.6%) தற்கொலை செய்துள்ளனர். இதற்கு அடுத்தபடியாக 12ம் வகுப்பு (18.3%) மற்றும் 8ம் வகுப்பு (17.7%) பயின்ற மாணவர்கள் உள்ளனர். இவ்வாறு புள்ளி விவரங்களில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



# சட்டப்பேரவை கூட்டம் தொடங்கியது

# முதல்வர் விஜய் உட்பட புதிய எம்எல்ஏக்கள் பதவியேற்பு

சென்னை:மே.12-
17வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் இன்று தொடங்கியது. இதில், தற்காலிக பேரவைத் தலைவர் கருப்பையா முன்னிலையில், முதல்வர் ஜோசப் விஜய் உட்பட பேரவையின் புதிய உறுப்பினர்கள் எம்எல்ஏவாக பதவியேற்க தொடங்கினர்.

தமிழக முதல்வராக தவெக தலைவர் ஜோசப் விஜய் நேற்று பதவியேற்றார். இதனையடுத்து தற்காலிக பேரவைத் தலைவராக சோழவந்தான் தொகுதி தவெக உறுப்பினர் எம்.வி.கருப்பையாவை நியமிப்பதற்கான கோப்பில், முதல்வர் ஜோசப் விஜய்யிடம், பேரவைச் செயலர் கி.சீனிவாசன் ஒப்புதல் பெற்றார்.

ஆளுநர் மாளிகையில், தற்காலிக பேரவைத் தலைவராக கருப்பையாவுக்கு ஆளுநர் அர்லேகர் நேற்று மாலை 4 மணிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்நிகழ்வில், முதல்வர் ஜோசப் விஜய் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்த நிலையில், 17வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் இன்று காலை தொடங்கியது. இதில் பங்கேற்பதாக தவெக, திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகளின் சார்பாக வெற்றிபெற்ற உறுப்பினர்கள் அனைவரும் சட்டப்பேரவைக்கு வருகை தந்தனர்.

எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக எம்எல்ஏக்கள் ஒரு குழுவாகவும், எஸ்.பி.வேலுமணி தலைமையில் ஒரு குழுவாகவும் தனித்தனியாக வந்தனர். இருவரும் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை.

முதல்வர் விஜய் பதவியேற்பின்போது வந்தது போலவே இன்றும் கோட் சூட்டில் வருகை தந்தார். சரியாக 9.30 மணிக்கு சட்டப்பேரவையின் முதல் கூட்டம் சபாநாயகர் தலைமையில் தொடங்கியது.

சபாநாயகர் உரைக்குப் பிறகு முதல்வர் விஜய் உட்பட உறுப்பினர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வந்து உறுதிமொழி எடுத்துக்கொள்ள தொடங்கினர்.

# வடகொரியாவின் 'டெட் ஹேண்ட்': அதிபர் கிம்முக்கு ஏதாவது நேர்ந்தால் தானாகவே அணு ஆயுத தாக்குதல்

பியாங்யாங்::மே 12-
வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்னுக்கு ஏதாவது நேர்ந்தால், எதிரி நாடுகள் மீது தானாகவே அணு ஆயுத தாக்குதல் நடத்தப்படும் என்று அந்த நாடு எச்சரிக்கை விடுத்துள்ளது. இது வடகொரியாவின் 'டெட் ஹேண்ட்' என்றழைக்கப்படுகிறது.
கடந்த 1980களில் சோவியத் யூனியன் (ரஷ்யா) 'டெட் ஹேண்ட்' என்ற அணு ஆயுத கட்டளை அமைப்பை உருவாக்கியது. எதிரி நாடுகளின் அணு ஆயுத தாக்குதலால் ரஷ்யா அழிந்து, அதன் தலைவர்கள் உயிரிழந்தால் 'டெட் ஹேண்ட்' தானாக செயல்பட்டு எதிரி நாடுகள் மீது அணு ஆயுத தாக்குதல்களை நடத்தும். இந்த 'டெட் ஹேண்ட்' அணு ஆயுத கட்டளை அமைப்பை தற்போதைய ரஷ்ய அரசு நவீன தொழில்நுட்பத்துடன் புதுப்பித்து வைத்திருக்கிறது. இதே பாணியில் வடகொரியாவும் 'டெட் ஹேண்ட்'



அமைப்பை உருவாக்கி உள்ளது. இதுகுறித்து சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் கூறியதாவது:
வடகொரியாவின் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப் பட்டு உள்ளன. இதன்படி பாதுகாப்பு சார்ந்த சட்டங்களிலும் பல்வேறு திருத்தங்கள் செய்யப் பட்டு உள்ளன. குறிப்பாக ரஷ்யாவை பின்பற்றி வடகொரியாவிலும் 'டெட் ஹேண்ட்' அணு ஆயுத கட்டளை அமைப்பு உருவாக்கப்பட்டு உள்ளது. எதிரி நாடுகளின் தாக்குதலில் வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்னுக்கு ஏதாவது நேர்ந்தால் 'டெட் ஹேண்ட்' அமைப்பு தானாக செயல்பட்டு, எதிரி நாடுகளின் மீது அணு ஆயுத தாக்குதல்கள் நடத்தப்படும்.
அமெரிக்கா, ஈரான் போர், வெனிசூலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ சிறைபிடிக்கப்பட்டது ஆகியவற்றை கருத்தில் கொண்டு 'டெட் ஹேண்ட்' அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதாக வடகொரியா விளக்கம் அளித்திருக்கிறது. இது மிகவும் ஆபத்தானது.
ஒருவேளை அதிபர் கிம் ஜாங் உன்னின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் 'டெட் ஹேண்ட்' அமைப்பால் தென்கொரியாவுக்கு மிகப்பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும். வடகொரியாவின் அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் ஹ்வாசாங் ரக ஏவுகணைகள் சுமார் 15,000 கிமீ. தொலைவு சீறிப் பாயக்கூடியவை என்று கூறப்படுகிறது. இதனால் வெகுதொலைவில் உள்ள அமெரிக்காவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படும். இவ்வாறு சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# புதுச்சேரி திமுக சட்டமன்ற கட்சித் தலைவராக நாஜிம் நியமனம்



புதுச்சேரி:மே.12-

புதுச்சேரி திமுக சட்டமன்றக் கட்சித்தலைவராக நாஜிம் எம்எல்ஏ நியமிக்கப்பட்டுள்ளார். அவர் எதிர்க்கட்சித் தலைவராகிறார்.

புதுவையில் மீண்டும் என்டிஏ ஆட்சி அமைகிறது. சட்டப்பேரவைத் தேர்தலில் 13 தொகுதிகளில் போட்டியிட்ட திமுக 5 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அதனால் திமுக எதிர்க்கட்சியாகிறது. காரைக்கால் வடக்கு தொகுதியில் போட்டியிட்டு வென்ற நாஜிம் எம்எல்ஏ, புதுச்சேரி திமுக சட்டமன்றக் கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். துணைத் தலைவராக செந்தில் குமாரும், கொறடாவாக செந்தில், செயலராக கார்த்திகேயன், பொருளாளராக விக்னேஷ் கண்ணன் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர். இதில் சட்டமன்ற கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நாஜிம் எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்பார்.தேர்தல் முடிவுகள்: நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள என்ஆர் காங்கிரஸ் 12 தொகுதிகளிலும், பாஜக 4 தொகுதிகளிலும், அதிமுக ஒரு தொகுதியிலும், லட்சிய ஜனநாயகக் கட்சி ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றன. மொத்தம் 18 தொகுதிகளில் வெற்றி பெற்றதன் மூலம் இக்கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கிறது. இந்த தேர்தலில் திமுக 5 தொகுதிகளிலும், தவெக 2 தொகுதிகளிலும், காங்கிரஸ் ஒரு தொகுதியிலும், நேயம் மக்கள் கட்சி ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றன. சுயேட்சைகள் மூன்று பேர் வெற்றி பெற்றனர்.

# பிரதமர் மோடி பங்கேற்ற விழாவுக்கு அருகில் வெடிபொருள் பறிமுதல்



பெங்களூரு:மே.12-

பெங்களூருவில் உள்ள வாழும் கலை அமைப்பின் 45வது ஆண்டு விழாவில் பிரதமர் மோடி நேற்று பங்கேற்றார். இந்த விழா நடைபெற்ற இடத்தில் இருந்து 3 கி.மீ. தொலைவில் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன. இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.இது குறித்து கர்நாடக போலீஸார் கூறியதாவது: பிரதமர் நரேந்திர மோடியின் வருகையை ஒட்டி வழக்கமான சோதனைகள் நடைபெற்றன. அப்போது வாழும் கலை அமைப்பு ஆசிரமத்தில் இருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் 2 ஜெலட்டின் குச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை நடைபாதையில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த வெடிபொருட்களை கொண்டு வந்தது யார் என்பது குறித்து சிசிடிவி கேமராக்கள் மூலம் ஆய்வு செய்து வருகிறோம். தலைநகர் டெல்லியில் தீவிரவாத தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டியிருப்பதாக உளவுத் துறை ஏற்கெனவே எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன்பேரில் டெல்லி முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. பெங்களூருவிலும் தீவிர சோதனை நடத்தி வருகிறோம்.பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின்போது வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டு இருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது. இதுதொடர்பாக தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு கர்நாடக போலீஸார் தெரிவித்தனர்.

# சட்டப்பேரவையில் ஒரே வரிசையில் திமுக மற்றும் அதிமுக

சென்னை:மே.12-

தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை கண்டிராத ஒரு புதிய திருப்பமாக, சட்டப்பேரவையின் எதிர்க்கட்சி வரிசையில் திமுக மற்றும் அதிமுக உறுப்பினர்கள் அருகருகே அமர்ந்திருந்தது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. தமிழகத்தில் 1967ல் திமுகவும், 1977ல் அதிமுகவும் முதன்முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றன. அன்று முதல் சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக இரு கட்சிகளும் மாறி மாறி ஆளுங்கட்சியாகவும், பிரதான எதிர்க்கட்சியாகவும் மட்டுமே இருந்து வந்துள்ளன.ஆனால், 2026 சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, புதிய அரசியல் சூழலில் இன்று இந்த இரு கட்சிகளும் எதிர்க்கட்சியாக, ஒரே வரிசையில் அமரும் நிலை ஏற்பட்டுள்ளது. அதிமுக் தொடர்ந்து இரண்டாவது முறையாக எதிர்க்கட்சி வரிசையில் அமர்வதும் இதுவே முதல்முறை ஆகும்.மேலும், ஆளுங்கட்சி இருக்கைகளில் புதிய முகங்களும், நீண்டகாலம் ஆட்சி செய்த பாரம்பரியக் கட்சிகள் இரண்டும் எதிர்க்கட்சி வரிசையிலும் அமர்ந்திருப்பது தமிழக தேர்தல் வரலாற்றின் மிகப்பெரிய மாற்றமாக கருதப்படுகிறது.

# வங்கதேச எல்லையில் பிஎஸ்எஃப் வேலி அமைக்க நிலம் ஒதுக்கீடு

## மேற்கு வங்க முதல்வர் அறிவிப்பு



கொல்கத்தா:மே.12-

வங்கதேச எல்லையோரம் வேலி அமைப்பதற்காக, எல்லைப் பாதுகாப்புப் படைக்கு (BSF) நிலத்தை மாற்றித் தர தனது அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக மேற்கு வங்க முதல்வர் சுவேந்து அதிகாரி அறிவித்துள்ளார்.இது குறித்து கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய மேற்கு வங்க முதல்வர் சுவேந்து அதிகாரி, "வங்கதேச எல்லையில் வேலி அமைப்பதற்காக, எல்லைப் பாதுகாப்புப் படைக்கு நிலத்தை மாற்றித் தர மேற்கு வங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் இன்றிலிருந்து தொடங்குகின்றன; 45 நாட்களுக்குள் நிறைவுபெறும். இது எனது அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவாகும்.

மத்திய அரசின் முதன்மைத் திட்டமான 'ஆயுஷ்மான் பாரத்' சுகாதாரத் திட்டம் மற்றும் மத்திய அரசின் வேறு பல திட்டங்களையும் மாநிலத்தில் அமல்படுத்தவுள்ளோம். தேர்தல் பிரச்சாரத்தின்போது மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அளித்த வாக்குறுதியின்படி, பள்ளி வேலைவாய்ப்புகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கான வயது வரம்பை ஐந்து ஆண்டுகள் நீட்டிக்கும் முன்மொழிவுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.மத்திய மற்றும் மாநிலப் பணிப்பிரிவுகளின் கீழ் வரும் அதிகாரிகளுக்கு மத்திய அரசு வழங்கும் பயிற்சிகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள, தலைமைச் செயலாளருக்கு அமைச்சரவை அதிகாரம் அளித்துள்ளது.முந்தைய அரசு அரசியலமைப்பை மீறி 'பாரதிய நியாய சம்ஹிதா' சட்டத்தை அமல்படுத்தவில்லை. தற்போது அச்சட்டத்தை மாநிலத்தில் அமல்படுத்த அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. மத்திய உள்துறை அமைச்சகம் ஜுன் 2025 இல் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பாக வெளியிட்ட சுற்றறிக்கையை முந்தைய அரசு புறக்கணித்திருந்தது. தற்போது மேற்கு வங்க அமைச்சரவை, அச்சுற்றறிக்கையை உடனடியாக அமல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது" என்று அவர் கூறினார்.

# நெல் மூட்டைகளை தாமதமின்றி கொள்முதல் செய்க: முதல்வர் விஜய்க்கு அன்புமணி கோரிக்கை





சென்னை: மே.12-

வட மாவட்டங்களில் தமிழக அரசே நேரடியாக நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என்று முதல்வர் விஜய்க்கு பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "காஞ்சிபுரம், திருவண்ணாமலை உள்ளிட்ட வட மாவட்டங்களில் நவரைப் பருவ சாகுபடியில் அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகள், நெல் கொள்முதல் நிலையங்களில் ஒரு வாரத்திற்கும் மேலாக கொள்முதல் செய்யப்படாததால் உழவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். கோடைப் பருவத்தில் உழவர்கள் அரும்பாடுபட்டு உற்பத்தி செய்த நெல்லை கொள்முதல் செய்யாமல் தாமதிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் டிசம்பர், ஜனவரி மாதங்களில் விதைத்தோ, நடவு நட்டோ ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நெல் அறுவடை செய்யப்படுகிறது. சம்பா பருவத்திற்கு பிந்தைய இந்தக் காலம் நவரைப் பருவம் என்றழைக்கப்படுகிறது.

நவரைப் பருவ அறுவடை கடந்த 10 நாள்களாக தீவிரம் அடைந்திருக்கும் நிலையில், காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர், ஒத்திவாக்கம் உள்ளிட்ட இடங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் உழவர்கள் கொண்டு வந்துள்ள பல்லாயிரக்கணக்கான நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படாமல் திறந்த வெளியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. கடந்த சில நாள்களுக்கு முன் பெய்த மழையில் பெருமளவிலான நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாகிவிட்டன. திருவண்ணாமலை மாவட்டம் வாணாபுரம், தண்டராம்பட்டு, மலமஞ்சனூர் புதூர், கரிப்பூர் ஆகிய இடங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களிலும் கடந்த இரு வாரங்களாக நெல் கொள்முதல் நடைபெறாததால் ஒவ்வொரு நிலையத்திலும் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் தேங்கிக் கிடங்கின்றன.

இந்தப் பகுதியிலும் மழையில் நனைந்து நெல் மூட்டைகள் சேதமடைந்துள்ளன. ராணிப்பேட்டை, செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களிலும் இதே நிலை காணப்படுகிறது. கொள்முதல் நிலையங்களில் தேங்கிக் கிடக்கும் நெல் மூட்டைகள் எப்போது கொள்முதல் செய்யப்படும் என்பது யாருக்கும் தெரியவில்லை.

காஞ்சிபுரம் முதல் கள்ளக்குறிச்சி வரை அனைத்து வட மாவட்டங்களிலும் நெல் மூட்டைகள் தேங்கிக் கிடப்பதற்கு காரணம் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்படாதது தான்.போதிய சரக்குந்துகள் இல்லாததால் தான் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்படவில்லை என்று கூறும் உணவுத் துறை அதிகாரிகள், இந்தப் பிரச்சினை எப்போது தீரும் ? உழவர்களுக்கு எப்போது விடியும் ? என்பதைக் கூற மறுக்கின்றனர். வட மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் குறித்த காலத்தில் கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்படாததும், அதனால் கொள்முதல் நிலையங்களில் போதிய இவசதி இன்றி, நெல் கொள்முதல் நிறுத்தப்படுவதும் இது முதல் முறையல்ல. பல ஆண்டுகளாகவே இந்த அவலம் தொடர்கிறது.

காஞ்சிபுரம், திருவண்ணாமலை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் தமிழக அரசின் நுகர்பொருள் வாரியம் நேரடியாக நெல் கொள்முதல் செய்யாமல், தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையம் என்ற மத்திய அரசின் கூட்டுறவு நிறுவனத்திடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தது தான் அனைத்து குழப்பங்களுக்கும் காரணம்.தமிழக அரசால் நெல் கொள்முதல் அதிகாரம் அளிக்கப்பட்ட தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கு எந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதியும் இல்லை. அதனால் அது தமிழ்நாடு அரிசி உற்பத்தியாளர் கூட்டமைப்பு என்ற தனியார் அமைப்புடன் உடன்பாடு செய்து கொண்டது.

இந்த தனியார் அமைப்பின் கட்டமைப்புகளை வைத்தே நிலைமையை சமாளித்து வரும் தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையம், நெருக்கடியான காலக் கட்டங்களில் வட மாவட்ட உழவர்களை அம்போ வென கைவிடுவதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, வேலூர் உள்ளிட்ட 8 வட மாவட்டங்களில் ரூ.800 கோடிக்கும் கூடுதலாக உழவர்களிடம் நெல் கொள்முதல் செய்த தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையம், அதற்கான தொகையை அரசிடமிருந்து பெற்ற பிறகும் உழவர்களிடம் வழங்காமல் ஏமாற்றி வந்தது.

இதற்கு எதிராக பாமகவும், உழவர் நல அமைப்புகளும் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து தான் அந்தத் தொகையை உழவர்களுக்கு தமிழக அரசு பெற்றுக் கொடுத்தது. அப்போதே வட மாவட்டங்களில் தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்தை இனியும் தமிழகத்தில் நெல் கொள்முதல் செய்ய அனுமதிக்கக் கூடாது என்று பல்வேறு தரப்பினரும் வலியுறுத்திய பிறகும், அதே அமைப்பையே நெல் கொள்முதல் செய்ய அனுமதித்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

உலகிற்கு உணவு படைக்கும் கடவுள்களான உழவர்களை கண்ணீர் சிந்தும் நிலைக்கு எந்த அரசும் அழைத்துச் செல்லக் கூடாது. தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்வதில் ஏற்பட்டுள்ள அனைத்து முட்டுக்கட்டைகளையும் தமிழக அரசு போக்க வேண்டும்.தேங்கிக் கிடக்கும் நெல் மூட்டைகளை உடனடியாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவை அனைத்திற்கும் மேலாக வட மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்ய தேசிய நுகர்வோர் இணையத்திற்கு அளிக்கப்படுள்ள அனுமதியை ரத்து செய்து விட்டு, தமிழக அரசே நேரடியாக நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும்" என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

# குஜராத் பெண் கொலையில் 30 ஆண்டுக்குப் பின் கணவர் கைது

அகமதாபாத்:மே.12-

குஜராத் மாநிலம் அகமதாபாத்தைச் சேர்ந்த ஷம்சுதீன் முசாஜி கெடாவாலாவுக்கும் அவருடைய மனைவி பர்சானாவுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால், ஷம்சுதீன், அவரது சகோதரர் இக்பால் கெடாவாலா மற்றும் இரு கூட்டாளிகளுடன் இணைந்து பர்சானாவைக் கொலை செய்துள்ளனர். அதற்குப் பிறகு பல ஆண்டுகளாக அந்தக் குடும்பத்தினர் குற்ற உணர்ச்சியாலும், கொல்லப்பட்ட பெண்ணின் நிழல் தங்களைத் துரத்துவதாக ஏற்பட்ட மாயை யாலும் கடும் பீதியில் இருந்துள்ளனர்.அந்த ஆவியிடமிருந்து விடுபட அவர்கள் மாந்திரீகர்களை நாடியுள்ளனர். அந்த மாந்திரீகர்கள் சடங்குகள் செய்தபோது, 1992ல் நடந்த இக்கொலை குறித்த விவரங்கள் கசிந்து, இறுதியில் அகமதாபாத் குற்றப்பிரிவு போலீஸாரைச் சென்றடைந்துள்ளது.இதையடுத்து, ஷம்சுதீன் மற்றும் அவரது குடும்பத்தினர் நடத்திய விசாரணையின் அடிப்படையில், பர்சானாவை புதைத்த இடத்திலிருந்து அவருடைய எலும்புக்கூட்டை தோண்டி எடுத்துள்ளனர். டிஎன்ஏ பரிசோதனையில் அது பர்சானாவின் எலும்புக்கூடு என தடயவியல் சோதனையில் உறுதி செய்யப்பட்டது.இதைத் தொடர்ந்து, ஷம்சுதீன் முசாஜி கெடாவாலா (61) மற்றும் இக்பால் முசாஜி கெடாவாலா (63) ஆகியோரை போலீஸார் கைது செய்துள்ளனர். அப்துல் கரீம் யாகூப்ஜி ஜவராவாலா மற்றும் ஷாலி யாபிபி சமுட்கான் பதான் ஆகிய இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது

# அசாம் மாநில முதல்வராக 2வது முறையாக நாளை ஹிமந்த பிஸ்வா சர்மா பதவியேற்பு



குவாஹாட்டி: மே.12-

அசாம் மாநில முதல்வராக 2வது முறையாக ஹிமந்த பிஸ்வா சர்மா நாளை பதவியேற்க உள்ளார்.அசாம் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் (என்டிஏ) கூட்டணி, மொத்தம் உள்ள 126ல் 102 இடங்களில் அமோக வெற்றி பெற்றது. இதன் மூலம் இக்கூட்டணி தொடர்ந்து 3வது முறையாக ஆட்சியைப் பிடித்தது. இந்நிலையில், குவாஹாட்டியில் என்டிஏ எம்எல்ஏக்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் சட்டப்பேரவை கட்சித் தலைவராக ஹிமந்த பிஸ்வா சர்மா தேர்ந்தெடுக்கப்பட்டார். இதையடுத்து, ஆளுநர் லட்சுமண் பிரசாத் ஆச்சார்யாவை சந்தித்த ஹிமந்த பிஸ்வா சர்மா, ஆட்சி அமைக்க உரிமை கோரினார். இதை ஏற்றுக் கொண்ட ஆளுநர் ஆட்சி அமைக்குமாறு அழைப்பு விடுத்தார்.இதன் மூலம் சர்மா 2வது முறையாக முதல்வராக நாளை பதவியேற்க உள்ளார். என்டிஏ எம்எல்ஏக்கள் கூட்டத்தில் பங்கேற்ற மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டா, ஹிமந்த பிஸ்வா சர்மாவின் பெயரை 8 பாஜக எம்.எல்.ஏக்கள் முன்மொழிந்ததாகத் தெரிவித்தார்.இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது: பாஜக மற்றும் என்டிஏ சட்டப்பேரவைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஹிமந்த பிஸ்வா சர்மாவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். வளர்ச்சி, ஸ்திரத்தன்மை மற்றும் பொது நலனுக்காக அசாம் மக்கள் மூன்றாவது முறையாகத் தொடர்ந்து ஆசி வழங்கியுள்ளனர். பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில், இந்த 'இரட்டை எஞ்சின்' அரசு 'வளர்ச்சியடைந்த அசாம்' மற்றும் 'வளர்ச்சியடைந்த பாரதம்' என்ற இலக்கை அடைய முக்கியப் பங்காற்றும். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.



# ஈரான் போருக்கு உதவியாக இராக் பாலைவன பகுதியில் ராணுவத் தளம் அமைத்த இஸ்ரேல்

டெல் அவிவ்: மே.12-

ஈரான் போருக்கு உதவும் வகையில், இராக்கின் பாலைவனப் பகுதியில் இஸ்ரேல் ராணுவத் தளம் அமைத்துள்ளது. இதை இராக் படையினர் கண்டுபிடித்த போது, அவர்களை விரட்டியடிக்க இஸ்ரேல் வான் தாக்குதலையும் நடத்தியுள்ளது.

இராக்கின் மேற்கு பாலைவனப் பகுதி மிகப் பெரியது. இங்கு மக்கள் நடமாட்டம் இருக்காது. கடந்த 19912003ம் ஆண்டுகளுக்கு இடையே சதாம் உசேனுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டபோது, அமெரிக்க ராணுவம் இப்பகுதியை ராணுவத் தளமாக பயன்படுத்தியது.

இப்பகுதியில் இஸ்ரேல் ராணுவமும் இராக்குக்கு தெரியாமல் ராணுவத் தளத்தை அமைத்துள்ளது. பாலைவனப் பகுதியில் ராணுவ ஹெலிகாப்டர் மற்றும் விமானங்கள் வருவதைப் பார்த்த ஆடு மேய்க்கும் தொழிலாளி ஒருவர் அப்பகுதியில் ராணுவ நடமாட்டம் குறித்த தகவலை இராக் அதிகாரிகளிடம் கடந்த மார்ச் மாதம் தெரிவித்தார். இதையடுத்து அப்பகுதிக்கு இராக் படையினர் சென்றனர். ஆனால் அவர்களை அங்கு நெருங்கவிடாமல் இஸ்ரேல் படைகள் வான் தாக்குதல் நடத்தி விரட்டியதாக திவால் ஸ்ட்ரீட் இதழில் செய்தி வெளியாகியுள்ளது.இராக்கில் இஸ்ரேல் ராணுவத் தளம் அமைத்திருந்த தகவல் அமெரிக்காவுக்கு மட்டுமே தெரிந்திருந்தது. ஈரான் மீது இஸ்ரேல் படைகள் வான் வழித் தாக்குதலை கடந்த ஏப்ரல் மாதம் நடத்தின. அப்போது ஏதாவது போர் விமானம் ஈரான் பகுதியில் சுட்டுவீழ்த்தப்பட்டால், அங்கு மீட்பு பணியை மேற்கொள்வதற்காக மீட்புக் குழுவினரை தயார் நிலையில் வைத்துள்ளது. அமெரிக்காவின் எப்15 ரக போர் விமானம் ஈரானில் சுட்டு வீழ்த்தப்பட்டபோது, ஒரு விமானப்படை வீரர் ஈரானில் சிக்கிக் கொண்டார். அவரை மீட்பதற்கும், அமெரிக்க படைகளுக்கு இராக்கில் உள்ள முகாமில் இருந்து தேவையான உதவிகளை இஸ்ரேல் அளித்ததும் தற்போது தெரியவந்துள்ளது.

இராக் மண்ணில் இஸ்ரேல் ராணுவத் தளம் அமைத்து, இராக் வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியது தொடர்பாக ஐ.நா.வில் இராக் கடந்த மார்ச் மாதம் இறுதியில் புகார் அளித்தது. இராக்கில் உள்ள ராணுவ முகாம்களை பாதுகாக்க அமெரிக்க ராணுவத்தினர் இராக்கில் பல தாக்குதல்கள் நடத்தினர். ஆனால் இராக் வீரர்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கும், தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என அமெரிக்கா தெரிவித்தது.



■ சிவகங்கை தெற்கு மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற அகரம் துரை இளங்கோவனுக்கும், சிவகங்கை தெற்கு மாவட்டத்தில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களை வெற்றிபெறச் செய்த மாவட்டச் செயலாளர் முத்துபாரதிக்கும், மானாமதுரை மேற்கு ஒன்றியம் சார்பில் சென்னை பனையூர் கழக தலைமை அலுவலகத்தில் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் மானாமதுரை மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் குட்வில் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி 100% தேர்ச்சி

## 15 ஆண்டுகளுக்கு மேலாக தொடர் சாதனை " மாணவர்களுக்கு பாராட்டு

மானாமதுரை மே.12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை குட்வில் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி 100% சதவீதம் தேர்ச்சி அடைந்ததை ஒட்டி பள்ளி மாணவர்களைப் பள்ளியின் தாளாளர் பூமிநாதன் அவர்கள் பாராட்டினார். மானாமதுரை குட்வில் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக 100 சதவீத தேர்ச்சியைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு 100/100 மதிப்பெண்களை 6 மாணவர்களும் , 99/100 மதிப்பெண்களை16 மாணவர்களும், 500க்கும் மேற்பட்ட மதிப்பெண்களை 41 மாணவர்களும் பெற்று 100% தேர்ச்சியும் அடைந்துள்ளனர். இதில் ரி. ஞாலினி என்ற மாணவி 591/600 மதிப்பெண்கள்




எடுத்து முதல் இடத்தையும், கி. ஸ்வேதா 589/600 மதிப்பெண்கள் எடுத்து இரண்டாவது இடத்தையும் , ஷி.நிதிஷ் 575/600 மதிப்பெண்கள் எடுத்து மூன்றாவது இடத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளார்கள். அவர்களைப் பள்ளித் தாளாளர் பூமிநாதன் பாராட்டி கௌரவித்தார்.



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப., தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இதில் பொதுமக்கள் (ம)மாற்றுத்திறனாளிகளிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்பஅட்டை, வேலைவாய்ப்பு, முதியோர், விபத்து நிவாரணம், உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

# காஷ்மீர் 'புல்டோசர்' நடவடிக்கை அமைச்சர் கடும் கண்டனம்

ஸ்ரீநகர்:மே 12-

ஜம்முகாஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் போதைப் பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த போலீஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, போதைப்பொருள் கடத்தல் வழக்குகளில் தொடர்புடையவர்களின் சொத்துகளைக் கண்டறிந்து அவற்றை இடிக்கும் பணியில் பேலீஸார் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 10 நாட்களில் மட்டும் சுமார் 10க்கும் மேற்பட்ட குடியிருப்பு மற்றும் வணிக ரீதியான கட்டிடங்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.இந்த அதிரடி நடவடிக்கை குறித்து காவல்துறை உயரதிகாரிகள் கூறுகையில், "போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்குத் தெளிவான மற்றும் உறுதியான எச்சரிக்கையை விடுக்கும் வகையிலேயே



இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதை இது உணர்த்தும்" என்று தெரிவித்தனர்.போலீஸாரின் இந்த 'புல்டோசர்' நடவடிக்கைக்கு ஜம்மு காஷ்மீர் மாநில சுகாதார துறை அமைச்சர் சகினா இட்டு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் கூறுகையில், "போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், நீதிமன்ற விசாரணை இன்றி வீடுகளை இடிப்பது சட்டத்திற்குப் புறம்பானது. போதைப் பொருள் கடத்தல் காரர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமே தவிர, அவர்களது குடும்பத்தினர் வசிக்கும் வீடுகளை இடிப்பது முறையான செயல் அல்ல" என்றார்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி,தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை.மே.12-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தலைமையில் நடைபெற்றது.மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்தி றனாளிகளுக்கான



உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 215 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, அறிவுறுத்தினார்.இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெ.ஃபி கிரேசியா உட்பட அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ரயில்வேயில் காத்திருப்பு பட்டியல் பிரச்சினை

# கடந்தாண்டில் 3 கோடிக்கும் மேற்பட்டோரின் டிக்கெட் ரத்து

புதுடெல்லி:.மே.12-

ரயில் பயணத்துக்காகக் காத்திருப்பு பட்டியலில் இருந்து பயணம் செய்ய முடியாதவர்களின் எண்ணிக்கை 3.39 கோடியை எட்டியுள்ளது.ரயிலில் பயணம் செய்ய முடியாமல், கடந்தாண்டில் டிக்கெட் ரத்து செய்யப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்ற விவரத்தை தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் சந்திர சேகர் கவுர் என்பவர் கேட்டுள்ளார்.

இதற்கு ரயில்வே அளித்த பதிலில் கடந்த 202526ம் நிதியாண்டில் 3.39 கோடி பயணிகள் காத்திருப்பு பட்டியலில் இருந்து இடம் கிடைக்காததால் அவர்களின் டிக்கெட் ரத்து செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. கடந்த 202122ம் ஆண்டில் டிக்கெட் உறுதி செய்யப்படாமல் ரத்து செய்யப்படும் பயணிகளின் எண்ணிக்கை 1.65 கோடியாக இருந்தது.

2022-23ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 2.72 கோடியாக உயர்ந்தது. 202324ம் ஆண்டில் இது 2.96 கோடியாக உயர்ந்தது. கடந்த நிதியாண்டில் இது 3.39 கோடியை எட்டியுள்ளது. டிக்கெட் ரத்தாவதன்மூலம் பண இழப்பு உள்ளிட்ட அதிக பாதிப்புகளை சந்திப்பது படுக்கை வசதி மற்றும் 3ம் வகுப்பு ஏசி வகுப்பில் முன் பதிவு செய்யும் பயணிகள் என்பதும் தெரியவந்துள்ளது.ஒவ்வொரு நாளும் 92,877 பயணிகள், ஒவ்வொரு மணி நேரமும் 3,870 பயணிகள், ஒவ்வொரு நிமிடமும் 64 பயணிகள், ஒவ்வொரு விநாடியும் ஒன்றுக்கும் மேற்பட்ட பயணிகள் தங்கள் டிக்கெட் உறுதி செய்யப்படும் வாய்ப்பை இழக்கின்றனர்.

# மானாமதுரையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

சிவகங்கை.மே.12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட் வளாகத்தில் உள்ள செயற்பொறியாளர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நாளை 12.05.2026 செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.சிவகங்கை மேற்பார்வையாளர் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில், விவசாயிகள் தங்களது குறைகளை நேரடியாக தெரிவித்து தீர்வு பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை செயற்பொறியாளர் ஷி.றி. கலாவதி தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மோடி தலைமையில் சோம்நாத் கோயிலுக்கு கும்பாபிஷேகம்

கிர் சோம்நாத்:மே.12-

குஜராத்தின் கிர் சோம்நாத் மாவட்டத்தில் உள்ள சோம்நாத் கோயிலுக்கு பிரதமர் மோடி தலைமையில் முதல் முறையாக இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

குஜராத்தின் கிர் சோம்நாத் மாவட்டத்தில் உள்ள சோம்நாத் கோயில், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத்தால் புதுப்பிக்கப்பட்டு 1951 ம் ஆண்டு திறக்கப்பட்டது. இதன் 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இக்கோயிலுக்கு பிரதமர் மோடி தலைமையில் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

குஜராத்தில் கோயில்களுக்கு கும்பாபிஷேகம் செய்யும் வழக்கம் இல்லை. ஆனால் தென்னிந்திய கோயில்கள் புதுப்பிக்கப்பட்டு 10 முதல் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் நடத்தப்படுவது வழக்கம். இதே முறையை பின்பற்றி சோம்நாத் கோயிலுக்கும் முதல் முறையாக கும்பாபிஷேகம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்கு பிரதமர் மோடி தலைமை தாங்குகிறார். இது மிகுந்த உற்சாகத்தை அளிப்பதாக தீர்த் புரோகித் சோம்புரா பிராமின் சமாஜ் தலைவர் ஸ்ரீ ஹெமால்பாய் பாட் தெரிவித்துள்ளார்.

சோம்நாத் மகாதேவ்க்கு பிரதமர் இன்று நடத்தும் மகா பூஜையைத் தொடர்ந்து இந்த கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இதற்காக நாட்டின் 11 முக்கிய புனித தலங்களில் இருந்து புனித நீர் கொண்டு வரப்பட்டுள்ளது. இது சோம்நாத் கோயிலின் கோபுர கலசத்தில் வேத மந்திரங்கள் முழங்க ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது

# "கஜானா காலி எனப் பேசுவது ஆரோக்கியமற்றது" முதல்வர் விஜய்க்கு காதர் மொகிதீன் அறிவுரை!

சென்னை::மே 12-

தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள விஜய், தனது முதல் உரையிலேயே தமிழக அரசின் கஜானா முழுவதும் துடைக்கப்பட்டு இருப்பதாக குறைக்கூற தொடங்கியிருப்பது ஆரோக்கியமற்றது என இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது : 'சிறந்த முறையில் மக்களுக்கான நலத்திட்டங்களையும், கல்வி, தொழில், பொருளாதாரம், விவசாயம் என பல்வேறு துறைகளில் தமிழ்நாடு செழிப்புற ஆட்சி செய்த திமுக அரசு தொடர வேண்டும்' என மக்களிடம் வாக்குகள் கேட்டு எங்கள் கட்சியின் சார்பில் இரண்டு உறுப்பினர்கள் சட்ட மன்றத்திற்குத் தேர்வாகியுள்ளனர்.





உங்கள் கட்சி ஆட்சி அமைத்திட தனிப் பெரும்பான்மையை மக்கள் வழங்கவில்லை என்ற போதிலும் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்பதில் கவனம் செலுத்தி, மக்களாட்சி மாத்திரமே நமக்கானதாக இருக்க முடியும் என்பதால் புதிய அரசு அமைந்திட நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருக்கிறோம்.

இதுதான் சாத்தியமாகும் என்ற நிலையில் மிக நீண்ட பரிசீலனைக்குப் பிறகு எங்கள் கட்சியின் அவசர உயர்மட்டக் குழு கூட்டம் கூடி அரசு அமைக்க ஆதரவு தருவதாக முடிவு எடுத்து அறிவித்தோம். திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் புதிய அரசு அமைப்பதில் தமிழக ஆளுநர் மேலும் தாமதிக்காமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்து அவரின் அரசியல் முதிர்சியையும் மக்களாட்சியின் மேல் அவர் கொண்டிருக்கும் அக்கறையையும் வெளிக்காட்டி இருந்தார். அதன் அடிப்படையிலேயே திமுக கூட்டணியில் அங்கம் வைக்கும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய நாங்கள் எவ்வித நிபந்தனையும் இன்றி புதிய அரசு அமைத்திட ஆதரவு கரம் நீட்டியுள்ளோம். ஆனாலும், நாங்கள் கொள்கை அடிப்படையில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியிலேயே தொடர்வதாகவும் அறிவித்திருக்கிறோம். அதன் பிறகே, ஆளுநர் உங்களை அழைத்து நேற்றைய தினம் புதிய அரசை அமைத்திருக்கிறார். தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று உங்களின் முதல் உரையிலேயே ""தமிழக அரசின் கஜானா முழுவதும் துடைக்கப்பட்டு இருப்பதாகவும், ரூ.10 லட்சம் கோடி கடன் வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டு குறை கூற தொடங்கியிருப்பது ஆரோக்கியமற்றது.எந்த அரசும் தேவைக்கேற்ற நிதியைப் பெற கடன் வாங்காமல் இருப்பதில்லை; அந்த கடனும் துறை சார்ந்த உயர்நிலை அதிகாரிகளும் பொருளாதார வல்லுனர்களும் ஒருசேர கலந்து ஆய்வு செய்தே அரசு நிர்வாகத்தின் வரம்புக்கு உட்பட்ட நிலையில் முடிவுகள் எடுத்து கையாளப்படுவது வழக்கம். இப்போதுதான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளீர்கள்.தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் வருவாய் மற்றும் நிதிநிலை சார்ந்த பலதரப்பட்ட சரியான தகவல்களை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் மூலம் மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டு தான் உங்களின் வார்த்தைகள் வெளிவர வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

உங்கள் தலைமையிலான புதிய ஆட்சியின் மக்கள் நலத்திட்டங்கள், பொருளாதார மேம்பாடு, கல்வி மற்றும் தொழில் வளர்ச்சி போன்ற பார்வையில் மாத்திரமே ஒரு முதல்வரின் உரை அமைந்தால் அனைத்து தரப்பினராலும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். எனவே, எடுத்த எடுப்பிலேயே குறைகள் சொல்லி ஆட்சியைத் தொடங்காமல், மக்கள் எதிர்பார்த்திடும் நல்ல, ஆரோக்கியமான, எல்லோருக்குமான சிறந்த ஆட்சியாக அமைந்திடவே விரும்புகிறோம்.எனவே, ஆரோக்கியமான அரசியலை முன்னிறுத்தி, சிறப்பான நிர்வாகத்தை நடத்தி, நாட்டு மக்களின் நலனை மாத்திரமே தாரக மந்திரமாகக் கொண்டு, மதக் காழ்ப்புணர்ச்சிகளுக்குக் கொஞ்சமும் இடம் தராமல் முந்தைய ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறப்பான மக்கள் நலத் திட்டங்களை தொடரச் செய்து அனைத்து தரப்பினரின் வரவேற்பையும் பாராட்டுக்களையும் பெறுகின்ற நல்லாட்சியைத் தரவேண்டும் என்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பு." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161